இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம்

(2000 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

2000, மே மாதம் 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 40

# 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம்

[2000 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. 32/98

**முதியோருக்கான தேசியப் பேரவை ஒன்றைத் தாபிப்பதற்கும் முதியோரின் நலன் மற்றும் முதியோரின் உரிமைகள் என்பவற்றை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டம் 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், இது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக் கூடியவாறான (இதனகத்துப்பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

## முதியோருக்கான தேசியப் பேரவையைத் தாபித்தல்

முதியோருக்கான தேசியப் பேரவையைத் தாபித்தல்.

2. (1) முதியோருக்கான தேசியப் பேரவையென அழைக்கப்படும் (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பேரவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர் மகுடத்தின்கீழ், இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும், அத்துடன் அத்தகைய பெயர் கொண்டு அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

CM 03651 – 500 (2019/08)

பேரவையின் அமைப்பு.

3. (1) பேரவையானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) சமூகசேவைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர். இவர் பேரவையின் தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) சமூகசேவைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சினுடைய மேலதிகச் செயலாளர். இவர் பேரவையின் உப தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(இ) சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர், இவர் பேரவையின் செயலாளராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியால் நியமிக்கப்படும் இலங்கையில் முதியோரைப் பிரதிநிதித்துவம் செய்யும் மூன்று உறுப்பினர்கள் ;

(உ) முதியோருக்கு சேவைகளை ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டுள்ளனவும் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப் பட்டவையுமான தொண்டர் அமைப்புகளைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக, அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் நியமிக்கப் படும் ஐந்து உறுப்பினர்கள் ;

(ஊ) உயர் தொழில்புரிவோரிடமிருந்து கூட்டிணைக்கப் பட்ட குழுக்களின் உறுப்பினர்களிடையேயிருந்து அல்லது பகிரங்க அலுவலர்களுக்கிடையேயிருந்து பெயர் அல்லது பதவி மூலம் சனாதிபதியால் அமைச்சரின் கலந்தாலோசனையுடன் நியமிக்கப்பட்ட ஏனைய நான்கு உறுப்பினர்கள்.

(2) (அ) உட்பிரிவு (1) இன் (ஈ), (உ) அல்லது (ஊ) என்னும் பந்திகளின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.



(ஆ) உட்பிரிவு (1) இன் (உ) பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், உட்பிரிவு (1) இன் (ஆ) பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட பதவிவழி உப தவிசாளருக்கு மேலதிகமாக, பேரவையின் உப தவிசாளராக சனாதிபதியால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம்.

4. ஒவ்வொரு நியமிக்கப்பட்ட உறுப்பினரும், இறப்பு, பதவி விலகல் அல்லது பதவிநீக்கம் என்பவற்றால் முன்னரே அவரது பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலே யொழிய மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைப் பதவியிலிருந்து நீக்குதல், மற்றும் விலகல்.

5. (1) சனாதிபதி, அமைச்சரின் கலந்தாலோசனையுடன் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரை அதற்கான காரணம் காட்டி பதவியிலிருந்து நீக்கலாம்.

(2) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரின் இறப்பு, பதவி விலகல் அல்லது நீக்கம் காரணமாக பதவி வறிதாக்கப்படும் ஏதேனும் பட்சத்தில், சனாதிபதி, அமைச்சரின் கலந்தாலோசனையுடன் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு அத்தகைய உறுப்பினரைப் பின்னுறுவதற்கு வேறெவரேனும் ஆளை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ முடிவுறாதெஞ்சியுள்ள அவரின் பதவிக் காலத்திற்கு அவர் பதவி வகித்தல் வேண்டும்.

(3) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம், அப்பயன்பட எந்நேரமும் தனது பதவியில் இருந்து விலகிக்கொள்ளலாம்.

(4) (அ) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், சுகவீனம் காரணமாக, இயலாமை அல்லது ஆறு மாதங்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாதிருப்பது காரணமாக அவரது பதவிக்கான கடமைகளைப் புரிவதற்குத்

தற்காலிகமாக முடியாதிருக்குமிடத்து, அத்தகைய இயலாமையை எழுத்து மூலம் சனாதிபதிக்கு அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாக இருத்தல் வேண்டும். அதன் மேல், சனாதிபதி அமைச்சரின் கலந்தாலோசனையுடன் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு அவரின் இடத்திற்குச் செயற்படவென வேறு ஒருவரை நியமிக்கலாம்.

(ஆ) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் முன்னறிவித்தல் இல்லாது அடுத்தடுத்து நடைபெறும் மூன்று கூட்டங்களுக்கு வருகை தராதிருந்தால், அவர் மீள நியமிக்கப்பட்டாலேயொழிய பேரவையின் அங்கத்துவத்தை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

உறுப்பினர்களின் வேதனம்.

6. பேரவையின் உறுப்பினர்களுக்கு நிதியென்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக அத்தகைய படித்தொகை செலுத்தப்படலாம்.

தவிசாளரும் அலுவலைக் கொண்டு நடாத்துதலும்.

7. (1) தவிசாளர், அவர் வருகை தந்துள்ள பேரவையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும். ஏதேனும் ஒரு கூட்டத்திற்கு தவிசாளர் வருகைதராதபோது, உப தவிசாளர்களில் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர், உப தவிசாளர் ஆகிய இருவரும் பேரவையின் ஏதேனும் ஒரு கூட்டத்திற்கு வருகைதராதிருக்கும் அத்தகைய கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் உறுப்பினர்கள், அக்கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கென இன்னுமொரு உறுப்பினரை அவர்களுக் கிடையேயிருந்து தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் எட்டு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(3) பேரவையானது தேவையேற்படும் போது அடிக்கடியும், அத்துடன் எப்படியேனும் ஆகக் குறைந்தது மாதம் ஒரு முறையும் பேரவை தீர்மானிக்கும் அத்தகைய நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும், அவற்றின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவும், அதன் கூட்டங்கள் தொடர்பிலும் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்தலாம்.



வெற்றிடமொன்று காரணமாக செயல்கள் செல்லுபடியற்றவையாக இருக்கமாட்டாது.

8. பேரவையின் உறுப்பினர்களுக்கிடையே வெற்றிட மேதேனும் உள்ளது அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் குறைபாடுள்ளது என்ற காரணத்தினால் மட்டும் பேரவையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதெனக் கருதப்படுதலாகாது.

உறுப்பினர்களுக்கு தத்துவங்களைக் கையளித்தல்.

9. பேரவையானது, இச்சட்டத்தினால், பேரவைக்கு அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக் கப்பட்ட ஏதேனும் தத்துவம், கடமை, பணி அல்லது எதனையும் பேரவையின் எவரேனும் உறுப்பினர்களுக்கு அல்லது சமூக சேவைகள் மாகாணப் பணிப்பாளர் ஒருவருக்குக் கையளிக்கலாம். அத்துடன் அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தல், நிறைவேற்றல் அல்லது புரிதல் தொடர்பில் அத்தகைய உறுப்பினர் அல்லது பணிப்பாளர் பேரவையின் பொதுவான அல்லது விசேட பணிப்பிற்குட்பட்டவர்களாதல் வேண்டும்.

தேசிய செயலகம் ஒன்றைத் தாபித்தல்.

10. பேரவை அதன் பணிகளைப் புரிகையில் அதற்குத் துணைபுரிவதற்காக தேசிய செயலகம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

பேரவையின் இலச்சினை.

11. (1) பேரவையின் இலச்சினையானது, பேரவையினால் தீர்மானிக்கப்படவும், திட்டமிடப்படவும் முடியும். அத்துடன் பேரவையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(2) பேரவையின் இலச்சினை, பேரவை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கும் அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) பேரவையின் இலச்சினை, பேரவையின் அனுமதியுட னின்றியும் பேரவையின் தவிசாளரினதும் உறுப்பினர் ஒருவரதும் முன்னிலையிலுமன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமூகமளித்ததற்கு அடையாளமாக சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) பேரவையானது, பேரவையின் இலக்கினை பொறிக்கப்பட்ட சாதனங்கள் ; ஆவணங்கள் பற்றிய ஒரு பதிவேட்டை பதிவைப் பேணி வருதலும் வேண்டும்.

பேரவையின் பிரதான பணி.

12. பேரவையின் பிரதான பணி இலங்கையில் முதியோரின் நலன் மற்றும் உரிமைகளை மேம்படுத்தலும் பாதுகாத்தலும் அத்துடன் முதியோர் சுயமதிப்பு, சுதந்திரம், கௌரவம் என்பவற்றுடன் வாழ்வதற்கான உதவி செய்து கொடுத்தலுமாகும்.

பேரவையின் ஏனைய பணிகள்.

13. பன்னிரெண்டாம் பிரிவின் ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி பேரவையின் ஏனைய பணிகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—

(அ) முதியோர் நலனையும் உரிமைகளையும் மேம்படுத்துவதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் ;

(ஆ) இலங்கையின் பாரம்பரிய விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட குடும்ப அலகை பலப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கும் ஏனைய தோதான குழுக்களுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை விதந்துரைத்தல் ;

(இ) முதியோர் நலனையும் உரிமைகளையும் மேம்படுத்துவதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் இயைபான அமைச்சுக்கள், மாகாண அதிகாரசபைகள், உள்ளூராட்சி அதிகார சபைகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், சமய நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் அத்துடன் தனியார்துறை அமைப்புக்கள் என்பவற்றின் கலந்தாலோசனையுடன் அவசியமான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் ;

(ஈ) பாடசாலைகளிலும் ஏனைய தோதான இடங்களிலும் இளம் சந்ததியினருக்கு முதியோர்மீது அவர்களுக்குள்ள கடமைகளை ஆழப்பதிய வைக்கும் கருத்துடன் விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களையும் ஏற்பாடு செய்தல் ;



(உ) முதியோர் தொடர்பான இயைபான சர்வதேசப் பிரகடனங்கள் சமவாயங்கள என்பவற்றை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதையும் அவற்றுடன் இணங்கியொழுகுவதையும் உறுதிப்படுத்தல்

(ஊ) முதியோர் தொடர்பான புள்ளிவிபரங்களை நாளதுவரை பேணுதல் ;

(எ) முதியோரின் பிரச்சினைகளுக்கான பிரதான காரணங்கள், அவர்களது தேவைகள், ஆசைகள் என்பவற்றை இனங்காணும் கருத்தொன்றுக்கான கற்கைகள் மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்தலுடன் அத்தகைய தேவைகளையும் ஆசைகளையும் திருப்திப்படுத்தக்கூடியதும் அத்தகைய காரணங்களுக்கு நிவாரணமளித்தலுக்கான அல்லது நீக்குதலுக்கான பயனுள்ள வழிமுறைகளை மேம்படுத்தலும் ;

(ஏ) முதியோரின் பிரச்சினைகள், தேவைகள் மற்றும் ஆசைகள் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் (எ) பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான கற்கைகளதும் ஆராய்ச்சிகளதும் கண்டுபிடிப்புக்களை எல்லா தோதான வழிகளினூடாக முறையான பகிரங்கப்படுத்தல் செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தல் ;

(ஐ) ஆதரவற்ற முதியோருக்கு தங்குமிட வசதியுடன் நலன்புரி நிலையங்கள், பொழுதுபோக்கு நிலையங்கள், பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களுடன் ஏனைய தோதான நிறுவனங்களைத் தாபிப்பதற்கு ஊக்குவித்தலுடன் அத்தகைய நிலையங்களுக்கும் நிறுவனங்களுக்கும் தேவையான வசதி வாய்ப்புகளையும் ஏற்பாடு செய்தல் ;

(ஒ) முதியோரின் அந்தஸ்தை உயர்த்துவதற்காக அரசாங்கத்தினாலும் தொண்டர் அமைப்புகளினாலும், ஆட்கள் குழுக்களினாலும் ஆரம்பிக்கப்பட்டதுடன் அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களையும், செயற் திட்டங்களையும் கண்காணித்தலும் ஒன்றிணைத்தலும் ;

1

(ஒ) முதியோருக்கான சுகாதார காப்புறுதி நலத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தலும் அமுல் படுத்தலும் ;

(ஔ) முதியோருக்குக் கிடைக்கக்கூடியதான சேவைகள் தொடர்பில் தகவல் வழங்குதல் ;

(க) முதியோரின் குறிப்புக்காக முதியோருக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் பணம் வழங்கப்பட்ட மற்றும் பணம் வழங்கப்படாத தொழில்வாய்ப்புகள் பற்றிய விபரக்கொத்தொன்றை பராமரித்தலுடன் தொழிலைப் பெறச்சாத்தியமான எல்லா வழிவகைகளில் முதியோருக்கு உதவுதல் ;

(ங) பொதுமக்களின் குறிப்புக்காக முதியோர் பற்றிய அவர்களுடைய ஆற்றல்கள் மற்றும் நிபுணத்துவம் தொடர்பான விபரக்கொத்தொன்றைப் பராமரித்தல் ;

(ச) முதியோருக்குத் தேவையான சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தலுடன் இச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிவாரணங்களைத் தேடிக்கொள்வதற்கும் முதியோருக்கு உதவுதல் ;

(ஞ) முதுமையை நம்பிக்கையுடனும் துணிவுடனும் எதிர்கொள்வதற்கு இளம்சந்ததியினரை தயார் படுத்தும் கருத்தொன்றுடன் பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதுடன் பொருத்தமான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை ஆரம்பிப்பதும் அத்தகைய திட்டங்களுக்கு சந்தா செலுத்துவதற்கு இளம் சந்ததியினரை ஊக்குவித்தல்.

பேரவையின் தத்துவங்கள்.

14. பேரவையானது, பின்வரும் தத்துவங்கள் உள்ளிட்ட அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய தத்துவங்கள் அனைத்தையும் பிரயோகிக்கலாம் :—

(அ) அசையும் அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது வேறு வகையில் கையுதிர்ப்புச் செய்தல் ;



(ஆ) பேரவைக்கு அளிக்கப்பட்ட அல்லது பேரவையால் கொள்ளப்பட்ட ஏதேனும் காணியில் கட்டிடங்களை நிர்மாணித்தல் ;

(இ) பேரவையின் பணிகளைப் புரிவதற்கும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களிலும் நேரடியாக அல்லது எவரேனும் அலுவலர் அல்லது அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட முகவரினூடாக ஈடுபடுதல் அல்லது அவற்றை நிறைவேற்றுதல் ;

(ஈ) ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறத்தலும் பேணிவருதலும் ;

(உ) பேரவையின் பணிகளைப் புரியும் நோக்கத்திற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய தொகைப் பணத்தைக் கடனாகப் பெறல் ;

(ஊ) அதன் பணிகளைப் புரிவதற்கு, இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள மூலங்களிலிருந்து அசைவுள்ள, அசைவற்ற ஆகிய இரண்டு வகையிலும் மானியங்கள், நன்கொடைகள், விருப்பாவணக் கொடைகள் என்பவற்றை ஏற்றுக்கொள்வது மற்றும் பெற்றுக்கொள்வதுடன் அவற்றைப் பிரயோகித்தலும் ;

(எ) பேரவையின் அலுவல்களின் முகாமைத்துவம் தொடர்பான விதிகளை ஆக்குதல் ;

(ஏ) பொதுவாகப் பேரவையின் பணிகளை உகந்த முறையில் புரிவதற்கு அவசியப்படும் அத்தகைய ஏனைய செயல்கள் மற்றும் விடயங்கள் யாவற்றையும் செய்தல்.

## பாகம் II

### முதியோரின் உரிமைகளைப் பாதுகாத்தல்

முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடு.

15. (1) பிள்ளைகள் அவர்களுடைய பெற்றோரை வேண்டுமென்று புறக்கணிக்கக்கூடாது என்பதுடன் பெற்றோரை அன்பு செய்தலும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தலும் பிள்ளைகளின் கடமையும், பொறுப்புமாதல் வேண்டும்.

(2) அரசானது, பிள்ளைகளற்ற அல்லது பிள்ளைகளினால் கைவிடப்பட்ட ஆதரவற்ற முதியோருக்குத் தோதான வதிவிட வசதிகளை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(3) முதியவர் எவரும், அவரது வயது காரணமாக, ஏதேனும் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்வதன் மீதோ கொடுப்பனவு செய்யாமலோ வேறு எந்த ஆள் ஏதேனும் கட்டிடத்தை அல்லது இடத்தை அல்லது நிறுவனத்தை அணுகக்கூடியவராகவுள்ளரோ அந்தக் கட்டிடத்தை, இடத்தை அல்லது நிறுவனத்தை அணுகுதல் அல்லது பயன்படுத்துதல் தொடர்பாக ஏதேனும் பொறுப்புக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது நிபந்தனைக்கு, அமைந்தவராதலாகாது.

## பாகம் III

### பதிவு செய்தல்

பேரவையுடன் பதிவு செய்து கொள்ளல்.

16. நேரடியாகவோ, அன்றி ஏதேனும் நிறுவனம் அல்லது ஏனைய குழு அல்லது அமைப்பு ஊடாகவோ எந்த ஒரு வடிவத்திலும் அல்லது விதத்திலும் முதியோருக்கு சேவைகளை அல்லது உதவியை (எந்தவொரு அமைப்பிலும் அல்லது விதத்திலும்) ஏற்பாடு செய்வதில் ஈடுபடும் ஒரு ஆள் அல்லது தன்னிச்சையான ஒழுங்கமைப்பு அல்லது ஏனைய ஒழுங்கமைப்பு இச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யலாம். இப்பிரிவில் "அமைப்பு" என்ற சொல் அமைச்சு அல்லது அரசாங்கத் திணைக்களத்தை உள்ளடக்கமாட்டாது.



பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்.

17. இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் விதித்துரைக்கப்பட்ட விதத்திலும் பேரவையின் செயலாளருக்கு செய்யப்படுதல் வேண்டும்.

பதிவுசெய்தல்.

18. (1) பேரவையானது 17 ஆம் பிரிவின்கீழ் ஒரு விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டதன் மீது, விண்ணப்பத்தை, மேற்கொள்ளும் ஆளினால் அல்லது அமைப்பினால் ஏற்பாடு செய்யப்படும் சேவைகள் மற்றும் உதவி தொடர்பான அவசியமான விசாரணைகள் மற்றும் நுண்ணாய்வுகள் செய்யப்பட்ட பின்னர், அத்தகைய ஆளை அல்லது அமைப்பை இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யலாமென்பதுடன் அதன் பயன்பட பதிவுச்சான்றிதழையும் வழங்கலாம்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆள் ஒருவர் அல்லது அமைப்பொன்று விடயத்திற்கேற்றவாறு, இதன் பின்னர் இச்சட்டத்தில் "அங்கீகரிக்கப்பட்ட ஆள்" அல்லது "அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு" என்று குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) பேரவையானது, அத்தகைய ஆள் அல்லது அமைப்பினால் ஏற்பாடு செய்யப்படும் சேவைகள் மற்றும் உதவி, தேவைப்படுத்தும் தரத்தைக் கொண்டிருக்கவில்லை என்று திருப்திப்படுமிடத்து ஆள் எவரினதும் அல்லது அமைப்பினதும் பதிவுக்கான விண்ணப்பத்தை மறுப்பதற்காக ஒரு கட்டளையை ஆக்கலாம் என்பதுடன் அத்தகைய கட்டளை அத்தகைய மறுப்பிற்கான ஏதுக்களை உள்ளடக்கியிருத்தலும் வேண்டும்.

(4) உட்பிரிவு (3) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி அத்தகைய மறுப்பின் ஒரு வாரகாலத்திற்குள் பேரவையினால் விண்ணப்பதாரருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(5) உட்பிரிவு (3) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டளையொன்றினால் இன்னலுறும் விண்ணப்பதாரரொருவர், அத்தகைய கட்டளை வழங்கப்பட்டு முப்பது நாட்களுக்குள் அத்தகைய கட்டளைக்கு எதிராக சமூகசேவைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு மேன்முறையீடொன்றை முன்வைக்கலாம்

## பாகம் IV

### நிதி

பேரவையின் நிதியம்.

19. (1) "முதியோரின் நலனுக்கான நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) நிதியத்திற்குள், பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் ஒதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஆ) பேரவையினால், இலங்கையிலாயினும், அல்லது வெளிநாட்டிலாயினும் எந்த வழியாலும் ஏதேனுமொரு மூலத்திலிருந்து நன்கொடைகள் அல்லது விருப்பாவணக் கொடைகள், உதவி அல்லது மானியங்கள் என்ற வகையில் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) பேரவையின் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படி வழியாக பேரவையினால் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்.

(3) நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் பேரவையினால் உறப்படும் ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்



(ஆ) முதியோரின் அந்தஸ்தை உயர்த்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு முனையும் அத்தகைய தனியாள் அல்லது அமைப்பினால் வழங்கப்படும் ஏதேனும் தனிச்சிறப்புவாய்ந்த அல்லது அளப்பரிய பங்களிப்பை ஏற்பு செய்தலில் ஏதேனும் தனியாள் அல்லது அமைப்புக்கு ஏதேனும் தன்னளிக் கொடுப்பனவைச் செய்ய பேரவைக்கு அதிகாரம் அளிக்கப்படும் அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(இ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அத்தகைய நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்காய்வும் கணக்குகளும்.

20. (1) பேரவையின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய செவ்வையான கணக்குகளைப் பேரவை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) பஞ்சாங்க ஆண்டே பேரவையின் நிதியாண்டாதல் வேண்டும்.

(3) அரசிலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் பேரவையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பேரவையின் பணத்தை முதலீடு செய்தல்.

21. பேரவைக்குச் சொந்தமாக இருக்கும் ஏதேனும் பணத் தொகை பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய விதத்தில் பேரவையினால் முதலீடு செய்யப்படலாம்.

## பாகம் V

### பேரவையின் பணியாட்டொகுதி

பேரவையின் பணியாட் டொகுதி.

22. (1) பேரவையானது, அதன் பணிகளைச் செவ்வையாகவும் திறமையாகவும் புரிவதற்கு அவசியமானதென பேரவை கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாகப் பேரவையானது :

(அ) பேரவையின் எவரேனும் அலுவலர் மீது அல்லது சேவையாளர்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டை பிரயோகிக்கலாம் அல்லது அவர்களை பதவியிலிருந்து நீக்கலாம்

(ஆ) அத்தகைய அலுவலர்களின் அல்லது சேவையாளர்களின் வேதனங்களை அல்லது சம்பளத்தை அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிக்கலாம் ;

(இ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சேவைநியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானித்தல் ;

(ஈ) பேரவையின் அலுவலர்களின் அத்துடன் சேவையாளர்களின் நன்மைக்காகச் சகாய நிதியம் ஒன்றையும் ஏனைய ஏதேனுமொரு நலன்புரித் திட்டமொன்றையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு அல்லது செயல் திட்டத்துக்கு உதவுதொகைகளையும் வழங்கலாம்.

பகிரங்க அலுவலர்களைப் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல்.

23. (1) பேரவையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்கச் சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும் அவர் எந்த அமைச்சின்கீழ் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அவ்வமைச்சுச் செயலாளரதும் பொதுநிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் பேரவையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.



(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவை புரிவதற்கு அரசாங்கத்துடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்து கொண்ட ஆள் ஒருவரைப் பேரவை தொழிலுக்கமர்த்தியவிடத்து அந்த ஆளினால் பேரவைக்குப் புரியப்படும் சேவைக்காலப் பகுதி எதுவும் அத்தகைய ஒப்பந்தத்தின் கீழான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, அரசாங்கத்திற்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

### சபை ஒன்றை நியமித்தல்

முதியோரினால் பராமரிப்புக் கோருவதைத் தீர்மானிப்பதற்கான சபை.

24. (1) இச்சட்டத்தின் நோக்கத்திற்காக முதியோரினால் பாராமரிப்புக் கோருவதைத் தீர்மானிப்பதற்காக சபையொன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சபைகள் நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டும். (இப்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சபையொன்று இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) இச்சட்டத்தின் அட்டவணையின் ஏற்பாடுகள், பேரவையின் தத்துவங்கள், சபையின் கூட்டங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டியதாக இருக்கும் நடவடிக்கை முறை, பேரவையின் உறுப்பினர்களுக்கு வழங்கக்கூடிய ஊதியங்கள், பேரவையின் தீர்மானங்கள் மற்றும் அத்தகைய தீர்மானங்களிலிருந்து மேன்முறையீடுகள் போன்றவற்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

பராமரிப்புக் கட்டளைகளுக்கான விண்ணப்பங்கள்.

25. (1) பிள்ளையொன்றை அல்லது பிள்ளைகளைக் கொண்டிருப்பதுடன், தன்னைப் பராமரிக்க முடியாதிருக்கும் முதியோரானவர் (இப்பிரிவில் "பெற்றோர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) அவரது பிள்ளையொன்று அல்லது பிள்ளைகள்

அவருக்கு மாதாந்த கொடுப்பனவு அல்லது ஏனைய ஏதேனும் பருவகாலக் கொடுப்பனவு அல்லது அவரது பராமரிப்புக்கான ஒரு தொகைப்பணம் கொடுப்பனவு செய்வதற்கானதொரு கட்டளைக்காக பேரவைக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) தன்னைப் பராமரித்துக்கொள்ள முடியாது வதியும் ஒரு பெற்றோரை எந்த ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆள் அல்லது ஒழுங்கமைப்பு பராமரிக்கிறதோ அத்தகைய ஆள் அல்லது ஒழுங்கமைப்பு அத்தகைய பெற்றோரின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் மாதாந்தப் படியொன்றை அல்லது ஏனைய பருவகாலக் கொடுப்பனவை அல்லது பெற்றோரின் பராமரிப்புச் செலவு மற்றும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்கான மொத்தப் பணத்தொகையை அங்கீகரிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது ஒழுங்கமைப்புக்குக் கொடுப்பதற்கான கட்டளையொன்றுக்காக சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக புகலிடம், உணவு மற்றும் உடை அடங்கலாக (ஆனால் அதற்கு மட்டுப்படுத்தாமல்) பெற்றோரது மொத்த அல்லது எதிர்பார்க்கப்பட்ட வருமானம் மற்றும் ஏனைய நிதியியல் மூலவளங்கள் அவரது அடிப்படை வசதிகளையும் அடிப்படை உடலியல் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கும் போதாதிருப்பின் அவர் தன்னைப் பராமரித்துக் கொள்ளமுடியாதவர் எனக் கருதப்படுவார்.

(4) சபையானது, ஒருவர் உள அல்லது உடல் இயலாமையினால் அதிலிருந்தும் அதன் பாதிப்பிலிருந்தும் அவர் தன்னைத் தானே பராமதித்துக் கொள்ளவும் முடியாது துன்பப்படுகிறார் எனத் திருப்திப்படுமிடத்து ஆனால் இச்சட்டத்தில் பொருள் விளக்கத்தின்படி முதியவராக அவர் இல்லாதவிடத்தும் ஒரு பிள்ளையை அல்லது பிள்ளைகளைக் கொண்டிருக்கும் ஆள் ஒருவருக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாக இருத்தல் வேண்டும்.

பிரதிவாதிகளின் இணைப்பு.

26. எவருக்கெதிராகப் பராமரிப்புக் கட்டளையொன்று பிறப்பிக்கப்படுகின்றதோ அவர் (இதனகத்துப்பின்னர் "பிரதிவாதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) விண்ணப்பதாரரைப் பராமரிப்பதற்கு ஆளாகும் ஏனைய ஆட்களை விண்ணப்பத்தின் பிரதிவாதிகளாக இணைப்புச் செய்து, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அவர்கள் மீதான அறிவித்தலைச் சேர்ப்பிக்கலாம்.



பராமரிப்புக் கட்டளைகள்.

27. (1) சபையானது, 25 ஆம் பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மீது, விண்ணப்பதாரரை பிரதிவாதி கட்டாயம் பராமரிக்க வேண்டும் என்பது நீதியானதும் நியாயமானதும் எனவும் :—

(அ) பிரதிவாதி தனது சொந்தத் தேவைகளுடன் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளின் தேவைகளையும் பூர்த்தி செய்தபின்னர் விண்ணப்பதாரருக்குப் பராமரிப்பை ஏற்பாடு செய்வதற்கு இயலுமானவராக இருக்கின்றாரெனவும் ; அத்துடன்

(ஆ) கடும் முயற்சிகளின் பின்னரும் விண்ணப்பதாரர், தன்னைப் பராமரித்துக்கொள்வதற்கு இயலாதவராக இருக்கின்றாரெனவும்,

கருத்துக்கொண்டால் விண்ணப்பதாரரின் நன்மைக்காக பராமரிப்புக் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(2) சபையானது, விண்ணப்பதாரரின் நன்மைக்காக பராமரிப்புக் கட்டளையை ஆக்கும்போது பின்வரும் விடயங்கள் உட்பட (ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லாமல்) சூழ்நிலைகள் அனைத்தையும் கவனத்திலெடுத்தல் வேண்டும் :—

(அ) அடிப்படை வசதிகளை வழங்குதல் மற்றும் அவரது உண்மையான, உடல்சார்ந்த, தேவைகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றை உத்தரவாதப்படுத்துவதற்கு அவசியமான நியாயமான செலவுகளைக் கவனத்திற் கொண்ட, விண்ணப்பதாரரின் நிதித் தேவைகள் ;

(ஆ) விண்ணப்பதாரரின் வருமானம், உழைக்கும்திறன், ஆதனம் மற்றும் வேறு நிதிவளங்கள் மற்றும் விண்ணப்பதாரர் தனது சேமிப்புகளை செலவுசெய்த விதம் அல்லது தனது நிதிவளங்களை வீணடித்த விதம் ;

(இ) விண்ணப்பதாரரின் ஏதேனும் உடல் அல்லது உளவாற்றற் குறைபாடு ;

(ஈ) பிரதிவாதியின் வருமானம், உழைக்கும் திறன், ஆதனம் மற்றும் ஏனைய நிதிவளங்கள் ;

(உ) தனது வாழ்க்கைத்துணையை அல்லது பிள்ளைகளை ஆதரிப்பதில் பிரதிவாதியால் உறப்படும் செலவுகள் ;

(ஊ) விண்ணப்பதாரரைப் பராமரிப்பதற்காக பிரதிவாதி, நிதியாகவோ அல்லது வேறு வகையிலோ வழங்கிய உதவு தொகைகள் மற்றும் ஆதார உதவிகள்.

(3) சபையானது, விண்ணப்பதாரர் விண்ணப்பத்திற்கு முன்னர் எந்நேரத்திலாவது பிரதிவாதியைக் கைவிட்டிருந்தார் அல்லது புறக்கணித்திருந்தார் எனத் திருப்திப்பட்டால், அது கட்டளையிடப்பட்ட பராமரிப்புத் தொகையைக் குறைக்கலாம்.

(4) சார்த்தப்பட்ட கைவிடல் அல்லது புறக்கணிப்பு ஆகியவற்றை எண்பிக்கும் பொறுப்பு அதனைச் சார்த்தும் பிரதிவாதியின் மீதாதல் வேண்டும்.

(5) ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிவாதிகள் இருக்குமிடத்து, சபையானது, நீதியானதும், ஒப்புரவானதுமான சபைக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய விதத்தில், பல்வேறு பிரதிவாதிகளிடையே பராமரிப்பைப் பிரித்துக் கொடுக்கலாம்.

(6) சபையானது, இச்சட்டத்தின் கீழ் விண்ணப்பமொன்றை விளங்குவதற்கு முன்னர், திறத்தவர்களுக்கிடையே மத்தியஸ்தம் வகிப்பதற்காக ஓர் இணக்க அலுவலருக்கு திறத்தவர்களுக்கிடையிலான வேறுபாடுகளை ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

பராமரிப்பதற்காகப் பிணையை கட்டளையிடுவதற்கான சபையின் தத்துவம்.

28. (1) பராமரிப்புக் கட்டளையொன்று, ஒரு தொகைப் பணத்தை அல்லது ஒரு மாதாந்தப் படியை அல்லது சபை தீர்மானிக்கக்கூடிய அத்தகைய காலப்பகுதிக்கு பருவகாலக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

(2) சபையானது பராமரிப்பை அளிக்கையில் —

(அ) சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆகக் குறைந்த தொகையை ஒரு வங்கியில் வைப்புச் செய்யுமாறு ; அல்லது

(ஆ) அத்தகைய ஆகக் குறைந்த தொகையைக் கொண்டு ஒரு காப்புறுதி செய்வோனிடம் ஓர் ஆண்டுத்தொகையைக் கொள்வனவு செய்யுமாறு,

விண்ணப்பதாரருக்கு கட்டளையிடலாம்.



(3) சபையானது, பராமரிப்புக் கட்டளையொன்றை ஆக்குகையில், கட்டணத்தைச் செலுத்தும் விதம் அல்லது முறை தொடர்பிலான பணிப்புகளை வழங்கலாம்.

பராமரிப்புக்கான கட்டளைகளின் காலம்.

29. (1) பராமரிப்புக்கான கட்டளையொன்று ஏதேனும் குறுகிய காலப்பகுதிக்கானதொன்றாக வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டிருக்குமிடத்துத் தவிரவும் அல்லது அத்தகைய ஏதேனும் கட்டளை இல்லாதொழிக்கப்பட்டிருக்குமிடத்து தவிரவும், ஒரு பராமரிப்புக் கட்டளையானது —

(அ) பராமரிப்பானது, பிணைப்பொறுப்பு கூடியதற்றதாயின் விண்ணப்பதாரரின் அல்லது பிரதிவாதியின் மரணத்தின்மீது, அவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அப்போது ;

(ஆ) பராமரிப்பானது, பிணைப்பொறுப்புடன் கூடியதாயின் விண்ணப்பதாரரின் மரணத்தின் மீது;

முடிவுறுதல் வேண்டும்.

(2) பராமரிப்புக் கட்டளையொன்று, ஒன்றுக்கும் மேற்பட்ட பிரதிவாதிகளுக்கு எதிராக ஆக்கப்பட்டிருக்குமிடத்து, ஒரு பிரதிவாதியின் மரணமானது, ஏனைய பிரதிவாதிகள், விண்ணப்பதாரருக்கு பராமரிப்பைச் செலுத்தவேண்டிய பொறுப்பைப் பாதித்தலாகாது.

(3) விண்ணப்பதாரர், பிரதிவாதி ஒருவரின் மரணத்தின்மீது பேரில், உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் பிரதிவாதிகளுக்கிடையே பொறுப்பை மீளப் பங்கீடுசெய்யும்படி சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

பராமரிப்புக்கான கட்டளைகளை வேறுபடுத்துவதற்கான சபையின் தத்துவம்.

30. (1) பராமரிப்புக் கட்டளை, ஏதேனும் பிறழ்பகர்வின் அல்லது பிழையான நிகழ்வின் அடிப்படையானதென சபை திருப்தியடையுமிடத்து அல்லது விண்ணப்பதாரரின் அல்லது பிரதிவாதிகளின் சூழ்நிலையில் ஏதேனும் முக்கிய மாறுதல் இருக்கும் இடத்து அல்லது வேறோர் ஆள் பிரதிவாதி ஒன்றாக இணைக்கப்படுமிடத்து, சபையானது நிலைபெற்றிருக்கின்ற பராமரிப்புக் கட்டளை எதனையும், அது பிணைப்பொறுப்புடன் கூடியதாயினும் அல்லது பிணைப்பொறுப்புடன் கூடியதற்றதாயினும் அதனை வேறுபடுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்:

அவருக்கு மாதாந்த கொடுப்பனவு அல்லது ஏனைய ஏதேனும் பருவகாலக் கொடுப்பனவு அல்லது அவரது பராமரிப்புக்கான ஒரு தொகைப்பணம் கொடுப்பனவு செய்வதற்கானதொரு கட்டளைக்காக பேரவைக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) தன்னைப் பராமரித்துக்கொள்ள முடியாது வதியும் ஒரு பெற்றோரை எந்த ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆள் அல்லது ஒழுங்கமைப்பு பராமரிக்கிறதோ அத்தகைய ஆள் அல்லது ஒழுங்கமைப்பு அத்தகைய பெற்றோரின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் மாதாந்தப் படியொன்றை அல்லது ஏனைய பருவகாலக் கொடுப்பனவை அல்லது பெற்றோரின் பராமரிப்புச் செலவு மற்றும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்கான மொத்தப் பணத்தொகையை அங்கீகரிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது ஒழுங்கமைப்புக்குக் கொடுப்பதற்கான கட்டளையொன்றுக்காக சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக புகலிடம், உணவு மற்றும் உடை அடங்கலாக (ஆனால் அதற்கு மட்டுப்படுத்தாமல்) பெற்றோரது மொத்த அல்லது எதிர்பார்க்கப்பட்ட வருமானம் மற்றும் ஏனைய நிதியியல் மூலவளங்கள் அவரது அடிப்படை வசதிகளையும் அடிப்படை உடலியல் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கும் போதாதிருப்பின் அவர் தன்னைப் பராமரித்துக் கொள்ளமுடியாதவர் எனக் கருதப்படுவார்.

(4) சபையானது, ஒருவர் உள அல்லது உடல் இயலாமையினால் அதிலிருந்தும் அதன் பாதிப்பிலிருந்தும் அவர் தன்னைத் தானே பராமதித்துக் கொள்ளவும் முடியாது துன்பப்படுகிறார் எனத் திருப்திப்படுமிடத்து ஆனால் இச்சட்டத்தில் பொருள் விளக்கத்தின்படி முதியவராக அவர் இல்லாதவிடத்தும் ஒரு பிள்ளையை அல்லது பிள்ளைகளைக் கொண்டிருக்கும் ஆள் ஒருவருக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாக இருத்தல் வேண்டும்.

பிரதிவாதிகளின் இணைப்பு.

26. எவருக்கெதிராகப் பராமரிப்புக் கட்டளையொன்று பிறப்பிக்கப்படுகின்றதோ அவர் (இதனகத்துப்பின்னர் "பிரதிவாதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) விண்ணப்பதாரரைப் பராமரிப்பதற்கு ஆளாகும் ஏனைய ஆட்களை விண்ணப்பத்தின் பிரதிவாதிகளாக இணைப்புச் செய்து, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அவர்கள் மீதான அறிவித்தலைச் சேர்ப்பிக்கலாம்.



பராமரிப்புக் கட்டளைகள்.

27. (1) சபையானது 25 ஆம் பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மீது, விண்ணப்பதாரரை பிரதிவாதி கட்டாயம் பராமரிக்க வேண்டும் என்பது நீதியானதும் நியாயமானதும் எனவும் :—

(அ) பிரதிவாதி தனது சொந்தத் தேவைகளுடன் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளின் தேவைகளையும் பூர்த்தி செய்தபின்னர் விண்ணப்பதாரருக்குப் பராமரிப்பை ஏற்பாடு செய்வதற்கு இயலுமானவராக இருக்கின்றாரெனவும் ; அத்துடன்

(ஆ) கடும் முயற்சிகளின் பின்னரும் விண்ணப்பதாரர், தன்னைப் பராமரித்துக்கொள்வதற்கு இயலாதவராக இருக்கின்றாரெனவும்,

கருத்துக்கொண்டால் விண்ணப்பதாரரின் நன்மைக்காக பராமரிப்புக் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(2) சபையானது, விண்ணப்பதாரரின் நன்மைக்காக பராமரிப்புக் கட்டளையை ஆக்கும்போது பின்வரும் விடயங்கள் உட்பட (ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லாமல்) சூழ்நிலைகள் அனைத்தையும் கவனத்திலெடுத்தல் வேண்டும் :—

(அ) அடிப்படை வசதிகளை வழங்குதல் மற்றும் அவரது உண்மையான உடல்சார்ந்த தேவைகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றை உத்தரவாதப்படுத்துவதற்கு அவசியமான நியாயமான செலவுகளைக் கவனத்திற் கொண்ட, விண்ணப்பதாரரின் நிதித் தேவைகள் ;

(ஆ) விண்ணப்பதாரரின் வருமானம், உழைக்கும்திறன், ஆதனம் மற்றும் வேறு நிதிவளங்கள் மற்றும் விண்ணப்பதாரர் தனது சேமிப்புகளை செலவுசெய்த விதம் அல்லது தனது நிதிவளங்களை வீணடித்த விதம் ;

(இ) விண்ணப்பதாரரின் ஏதேனும் உடல் அல்லது உளவாற்றற் குறைபாடு ;

(ஈ) பிரதிவாதியின் வருமானம், உழைக்கும் திறன், ஆதனம் மற்றும் ஏனைய நிதிவளங்கள் ;

(உ) தனது வாழ்க்கைத்துணையை அல்லது பிள்ளைகளை ஆதரிப்பதில் பிரதிவாதியால் உறப்படும் செலவுகள் ;

(ஊ) விண்ணப்பதாரரைப் பராமரிப்பதற்காக பிரதிவாதி, நிதியாகவோ அல்லது வேறு வகையிலோ வழங்கிய உதவு தொகைகள் மற்றும் ஆதார உதவிகள்.

(3) சபையானது, விண்ணப்பதாரர் விண்ணப்பத்திற்கு முன்னர் எந்நேரத்திலாவது பிரதிவாதியைக் கைவிட்டிருந்தார் அல்லது புறக்கணித்திருந்தார் எனத் திருப்திப்பட்டால், அது கட்டளையிடப்பட்ட பராமரிப்புத் தொகையைக் குறைக்கலாம்.

(4) சார்த்தப்பட்ட கைவிடல் அல்லது புறக்கணிப்பு ஆகியவற்றை எண்பிக்கும் பொறுப்பு அதனைச் சார்த்தும் பிரதிவாதியின் மீதாதல் வேண்டும்.

(5) ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிவாதிகள் இருக்குமிடத்து, சபையானது, நீதியானதும், ஒப்புரவானதுமான சபைக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய விதத்தில், பல்வேறு பிரதிவாதிகளிடையே பராமரிப்பைப் பிரித்துக் கொடுக்கலாம்.

(6) சபையானது, இச்சட்டத்தின் கீழ் விண்ணப்பமொன்றை விளங்குவதற்கு முன்னர், திறத்தவர்களுக்கிடையே மத்தியஸ்தம் வகிப்பதற்காக ஓர் இணக்க அலுவலருக்கு திறத்தவர்களுக்கிடையிலான வேறுபாடுகளை ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

பராமரிப்பதற்காக பிணையைக் கட்டளையிடுவதற்கான சபையின் தத்துவம்.

28. (1) பராமரிப்புக் கட்டளையொன்று, ஒரு தொகைப் பணத்தை அல்லது ஒரு மாதாந்தப் படியை அல்லது சபை தீர்மானிக்கக்கூடிய அத்தகைய காலப்பகுதிக்கு பருவகாலக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

(2) சபையானது பராமரிப்பை அளிக்கையில் —

(அ) சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆகக் குறைந்த தொகையை ஒரு வங்கியில் வைப்புச் செய்யுமாறு ; அல்லது

(ஆ) அத்தகைய ஆகக் குறைந்த தொகையைக் கொண்டு ஒரு காப்புறுதி செய்வோனிடம் ஓர் ஆண்டுத்தொகையைக் கொள்வனவு செய்யுமாறு,

விண்ணப்பதாரருக்கு கட்டளையிடலாம்.



(3) சபையானது, பராமரிப்புக் கட்டளையொன்றை ஆக்குகையில், கட்டணத்தைச் செலுத்தும் விதம் அல்லது முறை தொடர்பிலான பணிப்புகளை வழங்கலாம்.

பராமரிப்புக்கான கட்டளைகளின் காலம்.

29. (1) பராமரிப்புக்கான கட்டளையொன்று ஏதேனும் குறுகிய காலப்பகுதிக்கானதொன்றாக வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டிருக்குமிடத்துத் தவிரவும் அல்லது அத்தகைய ஏதேனும் கட்டளை இல்லாதொழிக்கப்பட்டிருக்குமிடத்து தவிரவும், ஒரு பராமரிப்புக் கட்டளையானது —

(அ) பராமரிப்பானது பிணைப்பொறுப்பு கூடியதற்றதாயின் விண்ணப்பதாரரின் அல்லது பிரதிவாதியின் மரணத்தின்மீது, அவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அப்போது ;

(ஆ) பராமரிப்பானது பிணைப்பொறுப்புடன் கூடியதாயின் விண்ணப்பதாரரின் மரணத்தின் மீது,

முடிவுறுதல் வேண்டும்.

(2) பராமரிப்புக் கட்டளையொன்று, ஒன்றுக்கும் மேற்பட்ட பிரதிவாதிகளுக்கு எதிராக ஆக்கப்பட்டிருக்குமிடத்து, ஒரு பிரதிவாதியின் மரணமானது, ஏனைய பிரதிவாதிகள், விண்ணப்பதாரருக்கு பராமரிப்பைச் செலுத்தவேண்டிய பொறுப்பைப் பாதித்தலாகாது.

(3) விண்ணப்பதாரர், பிரதிவாதி ஒருவரின் மரணத்தின்மீது பேரில், உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் பிரதிவாதிகளுக்கிடையே பொறுப்பை மீளப் பங்கீடுசெய்யும்படி சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

பராமரிப்புக்கான கட்டளைகளை வேறுபடுத்துவதற்கான சபையின் தத்துவம்.

30. (1) பராமரிப்புக் கட்டளை, ஏதேனும் பிறழ்பகர்வின் அல்லது பிழையான நிகழ்வின் அடிப்படையானதென சபை திருப்தியடையுமிடத்து அல்லது விண்ணப்பதாரரின் அல்லது பிரதிவாதிகளின் சூழ்நிலையில் ஏதேனும் முக்கிய மாறுதல் இருக்கும் இடத்து அல்லது வேறோர் ஆள் பிரதிவாதி ஒன்றாக இணைக்கப்படுமிடத்து, சபையானது நிலைபெற்றிருக்கின்ற பராமரிப்புக் கட்டளை எதனையும், அது பிணைப்பொறுப்புடன் கூடியதாயினும் அல்லது பிணைப்பொறுப்புடன் கூடியதற்றதாயினும் அதனை வேறுபடுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

(2) ஒரு பராமரிப்புக் கட்டளையை மாற்றுவதற்கான விண்ணப்பம் ஒன்று —

(அ) விண்ணப்பதாரரினால் ;

(ஆ) பிரதிவாதி ஒருவரினால் ;

(இ) பிரிவு 25(2) இல் குறிப்பீடு செய்யப்படும் அங்கீகாரம் பெற்ற ஓர் ஆள் அல்லது அமைப்பினால் ; அல்லது

(ஈ) பிணைப்பொறுப்புடன் கூடிய பராமரிப்பு தொடர்பில் பிரதிவாதி ஒருவரின் தனிப்பட்ட சட்டப் பிரதிநிதிகளினால்.

செய்யப்படலாம்.

(3) பராமரிப்புக் கட்டளை ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிவாதிகளுக்கு எதிரானதாக இருக்குமிடத்து அல்லது வேறு ஒரு பிரதிவாதி இணைக்கப்படுமிடத்து, பராமரிப்புக் கட்டளையை வேறுபடுத்துவதற்கான கட்டளையொன்றின் மீது, சபையானது, சூழ்நிலையில் நீதியானதும் ஒப்புரவானதும் எனக் கருதுகின்றவாறான அத்தகைய விதத்தில் பராமரிப்பை பங்கீடு செய்தல் வேண்டும்.

சபையின் கட்டளையின்கீழ் செலுத்தப்பட்ற பாலதான பராமரிப்பு பாராதீனப் படுத்த முடியாதது.

31. இச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளுக்குச் செலுத்தப்படற்பாலதான பராமரிப்பானது, சாட்டுதற்குரியதோ அல்லது கைமாற்றக்கூடியதோ அல்லது ஏதேனும் தன்சு அல்லது உரிமைக் கோரிக்கை எதுவாயினும் அதன்மீது அல்லது அது தொடர்பில் கைப்பற்றப்படுவதற்கு, நடுக்கட்டப் படுவதற்கு, பொறுப்பிக்கப்படுவதற்கு பொறுப்பாதல் ஆகாது.

பராமரிப்புக் கட்டளைகளை வலுவுக்கிடல்.

32. இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட பராமரிப்புக் கட்டளைகள், வலுவுக்கிடும் நோக்கங்களுக்காக, பராமரிப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு நீதிவானால் செய்யப்பட்ட கட்டளைகளாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், எந்த விண்ணப்பதாரரின் நலனுக்காக பராமரிப்புக் கட்டளை ஆக்கப்பட்டதோ அவர் வசிக்கும் இடத்தின் மீது நியாயாதிக்கம் கொண்ட நீதிவானால், அந்தக் கட்டளைச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட பராமரிப்புக் கட்டளை போன்ற அதே விதத்தில் வலுவுக்கிடப்படலாம்.



சபைக்கு அல்லது அதன் எவரேனும் உறுப்பினருக்கெதிரான அல்லது அதன் அல்லது அவரின் அதிகாரத்தை அவமதிப்பதான அவமதிப்புத் தவறு.

33. (1) ஆள் ஒருவர் —

(அ) சபையால் நடாத்தப்படும் விசாரணை ஒன்றின் காலப்பகுதியின்போது அல்லது முடிவின் பின்னர், சபையை அல்லது அதன் எவரேனும் உறுப்பினரை அகௌரவத்துக்குள்ளாக்கும் வண்ணம் போதிய காரணமின்றி ஏதேனும் கூற்றை வெளியிடுமிடத்து அல்லது ஏதேனும் வேறு செயலைச் செய்யுமிடத்து ;

(ஆ) அத்தகைய சபையின் சட்டப்படியான நடபடியில் தலையிடுமிடத்து.

(இ) சபையின் அபிப்பிராயப்படி, நியாயமானதான காரணமின்றி, அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் சபையின் முன்னிலையில் தோற்றத் தவறுமிடத்து ; அல்லது

(ஈ) சபையின் அபிப்பிராயப்படி நியாயமானதான காரணமின்றி, அவருக்குத் தொடுக்கப்பட்ட வினாவுக்கு மறுமொழியளிக்க அல்லது சபையால் நடாத்தப்படும் விசாரணைக்கு இயைபான ஏதேனும் ஆவணத்தை முன்வைக்கத் தவறுமிடத்து".

அத்தகைய ஆள், சபைக்கெதிரான அவமதிப்புத் தவறுக்கு அல்லது அவமரியாதை செய்த தவறைப் புரிந்தவராகக் கருதப்படல் வேண்டும்.

(2) சபையின் அதிகாரத்திற்கு எதிரான அல்லது அகௌரவமான அவமரியாதை தவறு ஒவ்வொன்றும், அது மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கெதிரான அல்லது அகௌரவமான அவமரியாதை தவறு ஒன்றொன்றாற்போல, மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்படற்குரியதாதல் வேண்டும்.

(3) சபைக்கெதிரான அல்லது சபையின் அதிகாரத்தை அவமரியாதை செய்த அவமதிப்புத் தவறின் ஒவ்வொரு முறைப்பாடும் சபையின் தலைவரால் கையொப்பமிடப்பட்ட கடிதத்தின் மூலம் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(4) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர், உட்பிரிவு (3), இன் கீழ் அறிவித்தல் ஒன்றைப் பெற்றதன் மேல், அந்த அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்ட அவமதிப்புத் தவறைப் புரிந்தார் என அந்த அறிவித்தலில் பெயர் குறிப்பிடப்படும் ஆள் மீது நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக இடைக்காலக் கட்டளை ஒன்றை வழங்கலாம்.

(5) உட்பிரிவு (4) இன் கீழ் இடைக்காலக் கட்டளை ஒன்று வழங்கப்பட்ட ஓர் ஆள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்தும் காரணத்தைக் காண்பித்தால் அன்றி, தண்டிக்கப்படுவதற்கு ஆளாதல் வேண்டும்.

(6) சபைக்கெதிராக அல்லது அதன் உறுப்பினருக்கு எதிராக அல்லது அதன் அதிகாரத்தை அவமரியாதை செய்து புரியப்படும் அவமதிப்புத் தவறுக்காக எவரேனும் ஆளுக்கு எதிரான ஏதேனும் நடவடிக்கைகளில், அத்தகைய சபையின் எந்த உறுப்பினரும், முதலில் குறிப்பிட்டப்பட்ட ஆளினால் சாட்சியொன்றாக அழைப்புக் கட்டளை விடுக்கப் படுவதற்கு ஆளாதல் ஆகாது. ஆனால், மேன்முறையீட்டு நீதி மன்றம், அவ்வாறு செய்வது அவசியமானது எனக் கருதினால், அத்தகைய உறுப்பினரை விசாரணை செய்யலாம்.

## பகுதி VII

### நானாவிதமானவை

ஒழுங்குவிதிகள்.

34. (1) அமைச்சர், விதித்துரைக்கப்படவேண்டும் என்று இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது இச்சட்டத்தால் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், வெளியிடப்படும் தேதியன்று அல்லது அதில் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய பின்னரான தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான விரைவில், அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அங்கீகரிக்கப்படாத் தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும். ஆனால், அதன்கீழ் ஏலவே செய்யப்பட்ட எதற்கும் அது பங்கம் ஏற்படுத்தல் ஆகாது.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக் கப்பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.



விதிகளை ஆக்குவதற்கான பேரவையின் தத்துவம்.

35. (1) பேரவையானது, அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் மற்றும் புரிதலைப் பாதிக்கின்ற அல்லது அதனோடு தொடர் புற்ற அல்லது அதற்கு இடைநேர்விளைவான ஏதேனும் கருமம் தொடர்பில், அது அவசியமானது எனக் கருதுகின்ற வாறான அத்தகைய விதிகளை ஆக்கலாம்.

(2) பேரவையால் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் அமைச்சரால் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படலும் வேண்டும்.

சோதனையிடுவதற்கும் தேடுவதற்குமான பேரவையின் தத்துவங்கள்.

36. பேரவையால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் —

(அ) முதியோருக்கு சேவைகளை அல்லது உதவியை வழங்குவதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் தன்னிச்சை யான ஒழுங்கமைப்பின் வளவுக்குள் நுழைந்து சோதனை இடலாம் ;

(ஆ) தன்னிச்சையான ஒழுங்கமைப்பொன்று இச்சட்டத் தின்கீழ் பதிவுசெய்யப்படாது முதியோருக்கு சேவை களும் உதவியும் வழங்குவதில் ஈடுபட்டுள்ளது என நம்புவதற்கு அவரிடம் காரணம் இருக்கும் அத்தகைய இடத்தில் நுழைந்து சோதனையிடலாம்.

(இ) அத்தகைய ஒழுங்கமைப்பால் பேணப்படும் ஏதேனும் புத்தகங்கள், இடாப்புகள் அல்லது பதிவேடுகளைச் சோதனையிடலாமென்பதுடன் அவைகளிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகளை எடுக்கலாம் அல்லது பிரதிகள் எடுக்கலாம் ;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் முறையாக இணங்கி ஒழுகப்படுகின்றனவா என்பதை நிச்சயிக்கும் நோக்கத்திற்காக அத்தகைய வளவு எதிலும் இருக்கும் எந்த ஆளிடமும் கேள்வி கேட்கலாம்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லையினுள் பேரவை ஓர் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படல் வேண்டும்.

37. பேரவை, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லையினுள் அட்டவணைப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

1

*இச்சட்டத்தின் கீழ் அல்லது பேரவையின் பணிப்புரையின் மீது எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கைக்காக பேரவையின் உறுப்பினர்களதும் அலுவலர்களதும் பாதுகாப்பு.*

**38.** (1) இச்சட்டத்தின் கீழ் அல்லது பேரவையின் பணிப்பின் மீது பேரவையின் எவரேனும் உறுப்பினரால் அல்லது அலுவலரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது;

(2) பேரவையால் அல்லது பேரவைக்கு எதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் கொண்டு வரப்பட்ட துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதிலும், பேரவையால் உறப்பட்ட செலவுகள் எதுவும், நிதியத்திலிருந்து கொடுத்துத் தீர்க்கப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் பேரவைக்குச் செலுத்தப்படும் அல்லது பேரவையால் அறவிடப்படும் செலவுகள் எதுவும், நிதியத்திற்கு வைப்புச் செய்யப்படலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆள் எவராலும், இச்சட்டத்தின் கீழ் அல்லது பேரவையின் பணிப்புரையின் மீது செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தில் அவருக்கெதிராகக் கொண்டுவரப்படும் துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதிலும் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவுகள், அத்தகைய செயலானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதினால், அத்தகைய துடர்ச்சி அல்லது குற்ற வழக்கில் அத்தகைய செலவு அவரால் அறவிடப்படாதவிடத்து; அது பேரவையால் செலுத்தப்படல் வேண்டும்.

*ஓர் உறுப்பினருக்கெதிராக அல்லது அவரது ஆதனத்திற்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படல் ஆகாது.*

**39.** பேரவைக்கெதிராகக் கொண்டு வரப்பட்ட ஏதேனும் வழக்கில் பேரவையின் ஓர் உறுப்பினருக்கு எதிராக அல்லது அவரது ஆதனத்துக்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படல் ஆகாது.

*விபரத்திரட்டுகள்.*

**40.** பேரவையானது இச்சட்டத்தின் கீழ் தனது பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, பேரவையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய கருமங்கள் தொடர்பிலும் அத்தகைய மாதிரியிலும் அத்தகைய விபரத்திரட்டுக்களை அல்லது தகவல்களைப் பேரவைக்குக் கொடுத்துதவுமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.



*தவறுகள்.*

**41.** (அ) இச்சட்டத்தின் கீழ் அவர் மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கிணங்க ஏதேனும் விபரத் திரட்டை அல்லது தகவலைக் கொடுத்து தவத் தவறுகின்ற ;

(ஆ) அவரால் கொடுத்துதவப்படும் ஏதேனும் விபரத் திரட்டில் அல்லது தகவலில் தெரிந்து கொண்டே பிழையான கூற்று எதையும் செய்கின்ற ;

(இ) அவரால் கொடுத்துதவப்படும் ஏதேனும் விபரத் திரட்டில் அல்லது தகவலில் வேண்டுமென்றே ஏதேனும் விடயத்தைக் குறிப்பிடாது விடுகின்ற ;

(ஈ) இச்சட்டத்தின் பிரிவு 36 இன் கீழ் அல்லது அப்பிரிவினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள், அத்தகைய அலுவலரால் பிரயோகிக்கப்படுகையில் அவரை எதிர்க்கின்ற அல்லது தடுக்கின்ற ;

(உ) சபையால் ஆக்கப்பட்ட பராமரிப்புக் கட்டளையொன்றுடன் அல்லது அத்தகைய சபையால் கொடுக்கப்படும் ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுக தவறுகின்ற ;

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது விதியை மீறுகின்ற ;

ஆள் எவரும், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், ஒரு நீதிவானின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது, ரூபா ஒரு இலட்சத்தை விஞ்சாத ஒரு குற்றப் பணத்திற்கு அல்லது ஒரு வருடத்தை விஞ்சாத ஒரு மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்றும் ஆளாதலும் வேண்டும்.

ஆட்கள் குழுக்களால் புரியப்படும் தவறுகள்.

42. ஆட்கள் குழுவொன்றினால் இச்சட்டத்தின் கீழ் தவறொன்று புரியப்படுமிடத்து, அப்போது —

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக இருக்குமிடத்து, அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் செயலாளரும் மற்றும் அலுவலரும், தனித்தனியாக, அத்தவறுக்கு குற்றவாளியாகக் கருதப்படல் வேண்டும் ;

(ஆ) அவ்வாட்கள் குழுவானது ஒரு நிறுவனமாயிருக்குமிடத்து, நிறுவனத்தின் ஒவ்வொரு பங்காளரும் அத்தவறுக்குக் குற்றவாளிகளாகக் கருதப்படல் வேண்டும் ;

ஆயின், தவறு அவரது அறிவு இல்லாது புரியப்பட்டது என்று அல்லது தவறு நிகழ்வதைத் தடுப்பதற்காக எல்லா விழிப்புக் கவனத்தையும் தான் பிரயோகித்ததாக எண்பிக்கும் அத்தகைய ஆள் எவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படல் ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

43. இச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

44. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினால் அன்றி —

"பிள்ளை" என்பது, நெறி முறையற்ற பிள்ளை அல்லது மகவேற்கப்பட்ட பிள்ளை மற்றும் ஒன்றுவிட்ட பிள்ளை ஒன்றை உள்ளடக்கும்.

"முதியவர்" என்பது, அறுபது வருடங்கள் வயதைக் கடந்து விட்ட ஆள் எவரும் எனப் பொருள்படும்.

"உள்ளூராட்சி அதிகார சபை" என்பது, ஒரு மாநகர சபை, நகரசபை, பிரதேசசபை எனப் பொருள்படுவதுடன், அத்தகைய ஏதேனும் சபையால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் மற்றும் நிறைவேற்றப்படும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுடன் நேரொத்த தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை, பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தால் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பெற்ற ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்.



"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதியால் விதித்துரைக்கப்பட்ட எனப்பொருள் கொள்ளப்படும்.

"மாகாணசபை" என்பது, அரசியலமைப்பின் அத்தியாயம் XVII A இன்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு மாகாணசபை எனப் பொருள்கொள்ளப்படும்.

## அட்டவணை

(பிரிவு 24 (2))

1. சபை ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்களில் ஒருவர் சபையின் தவிசாளராக நியமிக்கப்படல் வேண்டும்.

2. சபையின் ஒவ்வொரு உறுப்பினரும், அவர் முன்னதாகவே பதவியை வறிதாக்கினால் அன்றி, மூன்று வருட காலப்பகுதி ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

3. சபைக்குச் செயலாளர் ஒருவரும் மற்றும் சபை அதனது பணிகளை நிறைவேற்றுவதை இயலுமாக்குவதற்கு அவசியமானவாறான அத்தகைய வேறு அலுவலர்கள் மற்றும் சேவையாட்களும் (இணக்க அலுவலர்கள் உட்பட) நியமிக்கப்படல் வேண்டும்.

4. சபைக்குச் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் சபைக் கூட்டமொன்றில் கருத்திற்கொள்ளப்பட்டுத் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

5. ஒரு கூட்ட நடப்பெண் மூன்றாதல் வேண்டும்.

6. பந்தி (1) இன் கீழ் நியமிக்கப்பட்ட சபைத் தவிசாளர் சபையின் கூட்டமொன்றிற்குச் சமுகமளித்தால், அதற்குத் தலைமை வகித்தல் வேண்டும். சபைக் கூட்டமொன்றிற்குச் சபைத் தவிசாளர் சமுகமளிக்காதவிடத்து, சமுகமளிக்கும் உறுப்பினர்கள் தங்களுக்கிடையே இருந்து அக்கூட்டத்திற்கு ஒரு தவிசாளரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

7. (அ) சபைக்கூட்டமொன்றில், அத்தகைய கூட்டத்தில் கவனத்திற் கெடுத்துக்கொள்ளப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தின்மீது செய்யப்பட்ட தீர்மானம் ஒன்று அந்த விண்ணப்பத்தின்மீது சபையின் தீர்மானமாகக் கருதப்படல் வேண்டும்.

(ஆ) சபை உறுப்பினர்கள் விண்ணப்பம் ஒன்றின் மீதான அதன் தீர்மானத்திற்கு உடன்படாதவிடத்து, அத்தகைய உறுப்பினர்களின் பெரும்பான்மையின் தீர்மானம் அத்தகைய விண்ணப்பத்தின் மீதான சபையின் தீர்மானமாதல் வேண்டும் என்பதுடன், சபையின் உறுப்பினர்கள் தங்களது தீர்மானத்தில் சமமாகப் பிரிந்திருக்குமிடத்து, சபையின் தவிசாளரால் ஆதரவளிக்கப்படும் தீர்மானமே அந்த விண்ணப்பத்தின் மீதான சபையின் தீர்மானமாகக் கருதப்படல் வேண்டும்.

8. சபையின் தவிசாளர் அத்துடன் சபைக் கூட்டமொன்றிற்குத் தலைமை வகிக்காவிட்டால், அந்தக் கூட்டத்தின் தவிசாளர், சபைக்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றினைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, பின்வரும் ஒரு மாவட்ட நீதிமன்றத்தின் எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அழைப்பாணை விடுவதற்கும் சாட்சிகளின் வரவைக் கட்டாயப்படுத்துவதற்கும் ;

(ஆ) ஆவணங்களை முன்வைக்குமாறு கட்டாயப்படுத்துவதற்கும் ;

(இ) சாட்சிக்காரர்களுக்கு சத்தியத்தை அல்லது உறுதியுரையை ஏற்றுவதற்கும் ;

(ஈ) மத்தியஸ்தம் செய்யும் நோக்கத்திற்காக இணக்க அலுவலர் ஒருவரின் முன்னால் தோன்றுவதற்கு ஆள் எவருக்கும் அழைப்புக்கட்டளை இடுவதற்கு ;

(உ) ஒரு விண்ணப்பகாரரை அனுசரித்து நடத்தப்படும் ஏதேனும் விசாரணையிலிருந்து பொதுமக்களைப் புறநீக்குவதற்கு.

9. (அ) தனக்குச் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்தை விளங்குவதற்கு முன்னர், சபையானது மத்தியஸ்தம் செய்வதற்கு இணக்க அலுவலர் ஒருவருக்கு கருமத்தை ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

(ஆ) திறத்தவர்களிடையே முரண்பாடுகளைத் தீர்க்க முயலுவதும், நல்லிணக்கமொன்றை அடைவதற்கு அவர்களுக்கு உதவுவதும், பந்தி (அ) இன் கீழ் விடயமொன்று ஆற்றுப்படுத்தப்பட்ட இணக்க அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(இ) திறத்தவர்கள் நல்லிணக்கத்தை அடையுமிடத்து, சபை, பிரிவு 27 இன் கீழ் செய்யப்பட்ட கட்டளை ஒன்றின் மூலம் அத்தகைய இணக்கத்திற்குப் பயன் கொடுத்தல் வேண்டும்.

10. சபையின் எந்தச் செயலும் அல்லது நடவடிக்கையும், சபையின் ஏதேனும் வெற்றிடம் அல்லது அதன் ஏதேனும் உறுப்பினரின் நியமனத்தில் உள்ள ஏதேனும் குறைபாடு காரணத்தால், செல்லுபடியற்றதாகக் கருதப்படல் ஆகாது.



11. சபை உறுப்பினர்களுக்கு, நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படியும் கொடுக்கப்படல் வேண்டும்.

12. (அ) ஒவ்வொரு அழைப்புக் கட்டளையும் சபைத் தவிசாளரினால் கைச்சாத்திடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) அழைப்புக் கட்டளை எதுவும் அதில் பெயர் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு அதனை ஒப்படைப்பதன்மூலம் அல்லது அது நடைமுறைச் சாத்தியமற்றதாக இருக்குமிடத்து, அந்த ஆள் கடைசியாக வசித்ததாக அறியப்படும் இடத்தில் அதனை விட்டு வைப்பதன்மூலம் அல்லது பதிவு அஞ்சல் மூலம் சேர்ப்பிக்கப் படலாம்.

(இ) அழைப்புக்கட்டளையொன்று சேர்ப்பிக்கப்பட்டவாறான ஒவ்வொர் ஆளும் அதில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் சபைக்கு முன் சமூகமளித்தல் வேண்டும் என்பதுடன், சபையால் அவரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளித்தலும் வேண்டும். அல்லது அழைப்புக் கட்டளையின் தாற்பரியத்திற்கிணங்க, அவரிடம் வேண்டப்படுகின்றதும் அவரது உடைமையில் அல்லது தத்துவத்தில் உள்ளதுமான அத்தகைய ஆவணங்களை அல்லது வேறு பொருட்களைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(ஈ) உட்பந்தி (அ) வுக்கிணங்க, ஆள் ஒருவருக்கு பதிவஞ்சல்மூலம் அனுப்பப்பட்ட அழைப்புக் கட்டளை எதுவும், கடிதம் யாருக்கு முகவரியிடப்பட்டுள்ளதோ அந்த ஆளுக்கு, சாதாரண அஞ்சல் கடிதம் ஒப்படைக்கப்பட வேண்டிய நேரத்தில், முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டதை எண்பிப்பதில், அழைப்புக்கட்டளையைக் கொண்ட கடித உறையானது முறையாக முகவரியிடப்பட்டு, முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலில் அஞ்சலிடப்பட்டது என்பதை எண்பிப்பது போதுமானதாதல் வேண்டும்.

13. (1) சபைக்கு முன்னர் சாட்சியமளிக்கின்ற ஆள் ஒருவர் அத்தகைய சாட்சியம் தொடர்பில், சட்ட நீதிமன்றம் ஒன்றின் முன்னர் சாட்சி ஒருவர் சாட்சியமளிக்கையில், அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் அவரால் அளிக்கப்படும் சாட்சியம் தொடர்பில் அவர் உரித்துடையவராகும் எல்லாச் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) சபைக்கு அல்லது சபைக்கு முன்னர் அவ்வாளினால் கொடுக்கப்பட்ட எழுத்திலான அல்லது வாய்மூல சான்று எதுவும் தொடர்பில், ஆள் எவரும், எந்நீதிமன்றத்திலும் ஏதேனும் வழக்கிற்கு குற்றவழக்கு அல்லது வேறு ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைக்கு ஆளாகுதல் ஆகாது.

(3) இவ்வுறுப்புரையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு சபைக்கு அல்லது அதன் முன்னர் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட ஏதேனும் கூற்றுப் பற்றிய சாட்சியம் எதுவும், நீதிமன்றம் எதிலும் ஏதேனும் வழக்கில், குற்ற வழக்கில் அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கையில், அவருக்கு எதிராக அனுமதிக்கப்படற்பாலதாதல் ஆகாது:

ஆயின், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ள எதுவும் —

(அ) இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட தண்டனைச் சட்டக்கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் கீழான ஏதேனும் தவறுக்கான ஏதேனும் குற்றவழக்குத் தொடர்தலை அல்லது தண்டப்பணம் அளித்தலைப் பாதித்தலாகாது அல்லது பாதிப்பதாகக் கருதப்படல் அல்லது கொள்ளப்படல் ஆகாது.

(ஆ) தண்டனைச் சட்டக்கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் கீழான ஏதேனும் தவறுக்கான அச்சாட்சிக்கெதிரான குற்றவழக்குத் தொடரும் நோக்கங்களுக்கான சபை முன்னிலையில் சாட்சியமளிக்கின்ற எவரேனும் சாட்சியினது பெயரை அல்லது சான்றை அல்லது சான்றின் ஏதேனும் பாகத்தை வெளியிடுதலை அல்லது வெளிப்படுத்துவதைத் தடுத்தலாகாது அல்லது தடுப்பதாகக் கருதப்படுதல் அல்லது பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

14. (அ) சபை உறுப்பினர்கள் மற்றும் செயலாளரும் சபைக்கு உதவுவதற்கான நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், சபைக்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றை அனுசரித்து அதனால் நடாத்தப்படும் விசாரணை ஒவ்வொன்றும் அந்தக் கோவையின் கருத்தெல்லைக்குள்ளான ஒரு நீதி முறை நடவடிக்கையாகக் கொள்ளப்படலும் வேண்டும்.

(ஆ) சபைக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யும் பிறத்தியார் அல்லது எந்தப் பிறத்தியாருடன் விண்ணப்பம் தொடர்புறுகின்றதோ அந்த வேறு ஏதேனும் பிறத்தியார் அத்தகைய விண்ணப்பத்தின் மீதான சபையின் தீர்மானத்துடன் அதிருப்தியடைந்துள்ளவிடத்து, அத்தகைய பிறத்தியார், அந்த வேறு பிறத்தியாரை பிரதிவாதியாகக் குறிப்பிடும் எழுத்திலான மனு ஒன்றின் மூலம், அந்தத் தீர்மானத்திற்கெதிராக, சட்டப்பிரச்சினை ஒன்றின்மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு முறையீடு செய்யலாம்.

(இ) அத்தகைய மேன்முறையீட்டு மனு ஒவ்வொன்றும் மேன்முறையீடு தொடர்புறும் தீர்மானத் தேதியிலிருந்து 21 நாட்கள் காலப்பகுதி ஒன்றுக்குள் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் கோப்பிடப்படல் வேண்டும்.

(ஈ) நீதவான் நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கான மேன்முறையீடுகளுடன் தொடர்புபடும், 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், இப்பந்தியின் கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடுகளை விளங்குதல் மற்றும் முடிவுசெய்தல் ஆகியவற்றுடன் தொடர்புற்ற எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, முதியோரின் உரிமைகளை பாதுகாத்தல் (திருத்தச்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2011, பெப்புருவரி மாதம் 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 15.00

## 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, முதியோரின் உரிமைகளை பாதுகாத்தல் (திருத்தச்) சட்டம்

[2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. 23/2007

**2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, முதியோரின் உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, முதியோரின் உரிமைகளை பாதுகாப்பதற்கான (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

முன்னுரை யொன்றை உட்புகுத்துவதன் மூலம் 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, முதியோரின் உரிமைகளை பாதுகாப் பதற்கான சட்டத்தினைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் அத்தகைய சட்டவாக்கத்திற்கான விரிவுப்பெயரை உடனடுத்துப் பின்வரும் முன்னுரையை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது :-

"அரசியலமைப்பில் அடங்கியுள்ள அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகள், எல்லா மக்களினதும் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை முழுமையாக எய்துவதற்கு உதவிசெய்தலான அரசின் கடமையையும், நீதியால் ஆளப்பட்ட சமூகக் கட்டளையொன்றை பாதுகாப்பதன்மூலம் மக்களின் நல்லை மேம்படுத்துவதற்கான கடமையையும், ஏற்றங்கீகரித் துள்ளதாதலாலும் ; மக்கள் போதிய வாழ்க்கைத்தரத்தை எய்துவதையும் அதற்கு உதவிசெய்தலையும் ஏற்றங்கீகரிப்பதற் காதலாலும் ; மக்களின் ஒழுக்க மற்றும் கலாசார தரத்தை உயர்த்துவதற்காதலாலும் ; அதன்மூலம் மனித ஆளுமையின் முழுமையான அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காத லாலும் :

முதியவர்களை கௌரவத்துடனும் மரியாதையுடனும் நடத்துவதன்மூலம் அரசால் பராமரிக்கப்படவேண்டியவர் களும் பாதுகாக்கப்படவேண்டியவர்களுமான ஆட்கள் குழுவொன்றாக அவர்களை அரசு இனங்கண்டுகொண்டுள்ள தாதலாலும் :

முதியவர்களால் சமுதாயத்திற்கு செய்யப்பட்ட பங்களிப்பை கௌரவிக்கின்ற 1991 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் 16 ஆந் தேதிய 46/91 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகளின் தீர்மானத்தினை இலங்கை ஏற்றங்கீகரித்து உறுதிசெய்துள்ளதாதலாலும், வயோதிபத்தை அடைந்து கொண்டிருக்கும் முதியோர் சமூக, பொருளாதார, பௌதிக மற்றும் ஆன்மீகம் என்பவற்றில் நிறைவான வாழ்வை வாழுவதற்கு உதவி செய்வதற்கு அவசியமான உட்கட்டமைப்பினை அரசு ஏற்பாடுசெய்தல் கட்டாயமானதென அது உணர்ந்துள்ளதாதலாலும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

“(இ) சமூகசேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர்;”

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் “பேரவையின் உப தவிசாளராக சனாதிபதியால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக “பேரவையின் முழுநேர உபதவிசாளராக சனாதிபதியால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :-

“(3) முதியோருக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் பேரவையின் செயலாளராக இருத்தல் வேண்டும்.”.



*முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலமும் :-

(ஏ) பகிரங்க மற்றும் தனியார்துறை சேவைகளில் கிடைக்கப்பெறும் நன்மைகளையும் சலுகைகளையும் முதியோர் பெற்றுக்கொள்வதனை வசதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு முதியவருக்கும் முதியோர் அடையாள அட்டையை வழங்குதல் ;

(ஐ) ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு, நிருவாக மாவட்டம் மற்றும் மாகாணசபை என்பவற்றின் இடப்பரப்பிலும் முதியோர் குழுவைத் தாபித்தல் ;

(ஒ) முதியோரின் பிரச்சினைகளைப் பற்றி நன்கறிந்துள்ள இணக்க அலுவலர்களை அத்தகைய பிரச்சினைகளை தீர்த்துவைப்பதில் உதவிசெய்வதற்காக நியமனம் செய்தல்; அத்துடன்

(ஓ) முதியோர்களைப் பராமரிப்பதில் ஈடுபட்டுள்ள ஆட்களிடையே மூப்பியல் நூல் மற்றும் மூப்பியல் மருத்துவத்துறை பற்றிய அறிவைப் பரப்புதல் ;”.

(2) (ஏ) என்னும் பந்தியை (ஔ) என்னும் பந்தியாக மீள் எழுத்திடல்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(3) (அ) ஆளெவரும், ஏதேனும் கட்டணத்தை கொடுப்பனவு செய்வதன் மீதோ அல்லது வேறுவகையிலோ ஏதேனும் கட்டிடத்தை அல்லது இடத்தை அல்லது நிறுவனத்தை அணுகுதல் அல்லது பயன்படுத்தல் தொடர்பாக எத்தகைய பொறுப்பு, மட்டுப்பாடு அல்லது நிபந்தனை வேறு எவரேனும் ஆள் மீது சுமத்தப்படவில்லையோ அத்தகைய ஏதேனும் பொறுப்பு, மட்டுப்பாடு அல்லது நிபந்தனைக்கு எவரேனும் முதியவரை வயது காரணமாக உட்படுத்துதலாகாது.

(ஆ) ஆளெவரும் எவரேனும் வேறு ஆளினால் பயன்படுத்தப்படுகின்ற அல்லது துய்க்கப்படுகின்ற அல்லது நீடிக்கப்படுகின்ற வசதிவாய்ப்பு, நலன், அனுகூலம் அல்லது சேவையை, கட்டணத்தை கொடுப்பனவு செய்வதன் மீதோ அல்லது வேறுவகையிலோ எவரேனும் முதியவரினால் அத்தகைய வசதிவாய்ப்பு, நலன், அனுகூலம் அல்லது சேவை பயன்படுத்தப்படுவதனை அல்லது துய்க்கப்படுவதனை வயதின் காரணமாக அவருக்கு மறுத்தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் நீக்கம்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"பேரவையுடன் பதிவுசெய்து கொள்ளல்.

16. (1) முதியோருக்கு வதிவிடரீதியான பராமரிப்பை வழங்கும் நோக்கத்துக்காக ஒரு நிறுவனத்தைத் தாபித்து பேணிவருவதில் தன்னிச்சையாயினும்சரி வேறுவகையிலாயினும்சரி ஈடுபடுகின்ற அல்லது எண்ணுகின்ற ஒவ்வோராளும் அல்லது ஒவ்வோர் ஒழுங்கமைப்பும் ஐந்துக்கு மேற்பட்ட முதியோர் அங்கு வசித்தால் அத்தகைய நிறுவனத்தை இச்சட்டத்தின் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க பதிவுசெய்தல் வேண்டும்.



(2) பிரிவு (1)இன் ஏற்பாட்டுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் அல்லது ஒழுங்கமைப்பு இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட் பிரிவினை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(2அ) பேரவை, 16 ஆம் பிரிவின் நியதிகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் ஆளை அல்லது ஒழுங்கமைப்பினை, அது அவசியமானதென கருதக்கூடியவாறான ஏதேனும் ஆவணத்தை அல்லது அறிக்கையை பேரவைக்கு கொடுத்துதவுவதற்கு தேவைப்படுத்தலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் "இச்சட்டத்தின் நோக்கத்திற்காக முதியோரினால் பராமரிப்புக் கோருவதைத் தீர்மானிப்பதற்காக சபையொன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சபைகள் நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "முதியோரினால் பராமரிப்புக் கோருவதைத் தீர்மானிப்பதற்காக சட்டம், முகாமைத்துவம், மனித உரிமைகள், சமூகசேவை, மருத்துவம் அல்லது ஆலோசனை செய்தல் ஆகிய துறைகளில் அறிவும் அனுபவமும்கொண்ட பிரபல்யமானவர்களும் நேர்மையானவர்களுமான ஆட்களை உறுப்பினர்களாகக்கொண்ட சபையொன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சபைகள் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 24அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவை, உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"இணக்க அலுவலர்கள்.

24அ (1) பேரவையால் நியமிக்கப்பட்ட இணக்க அலுவலர் ஒருவர் பேரவையால் அவருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பராமரிப்புக் கோரிக்கையை மத்தியஸ்தம் செய்தல் வேண்டும்.

(2) இணக்க அலுவலருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கோரிக்கை தொடர்பில் தீர்வொன்றை அடையமுடியாதுள்ளவிடத்து அவர் அத்தகைய கருமத்தை சபைக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

(3) பேரவை, இணக்க அலுவலர் தெரிவிற்காக பின்பற்றப்படவேண்டிய தகைமைகளையும் மூலப்பிரமாணங்களையும் தீர்மானித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் இரண்டாம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் :-

"(2) சபையானது பராமரிப்பை அளிக்கையில் -

(அ) சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆகக்குறைந்த பணத்தொகையை குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய வங்கியில் வைப்புச்செய்யுமாறு ; அல்லது



(ஆ) அத்தகைய ஆகக்குறைந்த பணத்தொகைப் பெறுமதியைக்கொண்டு ஒரு காப்புறுதி செய்வோனிடம் ஓர் ஆண்டுத்தொகையைக் கொள்வனவுசெய்யுமாறு

பிரதிவாதிக்கு கட்டளையிடலாம்.

(3) பிரதிவாதி (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, சபை பிரதிவாதியால் விண்ணப்பதாரருக்கு கொடுக்குமதியான தொகையை அவரது சம்பளத்திலிருந்து கழித்து அத்தகைய தொகையை விண்ணப்பதாரரின் வரவுக்கு அனுப்புமாறு பிரதிவாதியின் தொழில்தருநரை தேவைப்படுத்தலாம்.

(2) அதன் (3) ஆம் உட்பிரிவை (4) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**11.** இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.